# பக்தி இலக்கியங்களில் இயற்கை
# இதழின் சுவை தமிழில், தமிழின் சுவை இதழில்

***இரா. ஹரிணிகாஸ்ரீ***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
உண்ணாமலை தொழில் நுட்பக் கல்லூரி, கோவில்பட்டி

***முனைவர் அ. பாக்கியமுத்து***
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8968

***ஆய்வுச்சுருக்கம்***

*இயற்கை என்றால் என்ன? பிறிதொன்றால் உருவாக்கப்படாது, தனது இயல்பில் மாறாது இருப்பது எதுவோ, அதுவே இயற்கையாகும். இயற்கை எதும் சக்தியை 'ஏது' என்றும் கூறுவர். ஒன்றன் தோற்றத்திற்கும் இயற்கை மூலக் காரணமாக இருப்பதாக அதன் சக்தி ஏது எனச் சுட்டப்படும். இயற்கையின் தொழிற்பாடு கள் வட்டமாகச் சுழன்று கொண்டிருக்கும். எனவே அது அழிவில்லாதது. அதன் ஒரு சக்தியை இன்னொரு சக்தியாக மாற்ற முடியுமே அல்லாமல் ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆதலால் பொதிக விஞ்ஞானம் இயற்கையின் சக்தி அழிவில்லை என்கிறது.*

*இயற்கையின் சக்தியே உலகை இயக்குகிறது. அது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களால் ஆனது. இடைச்சங்க காலத்தில் வாழ்ந்த தொல்காப்பியர்,*

*நிலம் தீ நீர் வளி விசும்போடு*
*ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம் அதலின்*

*என இந்த உலகம் ஐம்பூதங்களின் கலவை என்கிறார்.*

*புறநானூறும்,*

*மண் திணிந்த நிலனும்*
*நிலம் ஏந்திய விசும்பும்*
*விசும்பும் தைவரு வளியும்*
*வளித் தலைஇ தீயும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்து இயற்கை*

*ஏன ஐம்பூதத்து இயற்கையைத் தெளிவுபடுத்துகிறது.*

**முன்னுரை**

நீர், மண், காற்று, வெப்பம் ஆகியவற்றை உள்ளடக்கம் உயிரோட்டமுள்ள பாரம்பரிய செல்களின் பிரதிபலிப்பு வடிவமாக தாவரங்கள் திகழ்கின்றன. ஒரு செல் உயிரினத்திலிருந்து கடைசி இனமான மனித இனம் வரை நீரையும், காற்றையும், வெப்பத்தையும் வெளியிலிருந்து எடுத்து மனித உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஆற்றலைப் பெற்றுத் தருகின்றன. தாவரங்கள் இல்லையெனில் பிற உயிரினங்கள் இவ்வுலகில் இல்லை என்பது உண்மை.

**தாவரங்கள் தெய்வங்களின் உறைவிடம்**

வேத காலத்தில் தாவரங்களைத் தெய்வங்களின் உறைவிடமாகவே கருதினர். எ.கா. ஆல் (வடபத்ர விருட்சம்) மரம் இம்மரத்தினை,

1. வேர் பகுதி பிரம்மாவாகவும்
2. தண்டு பகுதி சிவனாகவும்
3. கிளைப் பகுதி விஷ்ணுவாகவும்

கருதி மும்மூர்த்திகளாக எண்ணி வழி பட்டனர். மேலும்

1. அரச மரத்தை விஷ்ணுவாகவும்
2. அத்தி மரத்தை பிரம்மாகவும்
3. வேம்பு மரத்தை, சக்தியாகவும்

கருதி அவற்றை இக்கடவுள்களின் உறையிடமாக பாவித்து வழிபட்டு வருகின்றனர்.

**பொதியல் (அ) அம்பலம் (அ) மன்றம்**

சங்க காலத்தில் சமயச் சடங்குகள், பொதுக்கூட்டங்கள், ஊர் பஞ்சாயத்துகள் முதலியவற்றை ஒரு குறிப்பிட்ட மரத்தடியில் தெய்வ நம்பிக்கையுடன் நடத்துவது வழக்கமாக இருந்துள்ளது. இதனைப் பொதியல், அம்பலம் மற்றும் மன்றம் எனக் கூறினர். இன்றும் தமிழகத்தில் சில கிராமங்களில் இது நடைமுறையில் உள்ளது. பொதுவாக இதற்கு 5 புனித மரங்கள் பயன்பட்டதாகவும் (சமஸ்கிருதத்தில் பஞ்சவட்டி) அவற்றை எத் திசையில் நட வேண்டும் என்பதையும் வகுத்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

| | | |
|---|---|---|
| அரசு | - | கிழக்கு |
| ஆல் | - | மேற்கு |
| வில்வம் | - | வடக்கு |
| நெல்லி | - | தெற்கு |
| அசோகா | - | தென் கிழக்கு |

எ.கா. புத்தர் ஞானம் பெற்றது அரச மரத்தடியில் (போதி மரம்)

**இயற்கைத் தெய்வ வழிபாடு**

ஆதிமனிதன் ஐம்பூதங்களாலும் ஏற்பட்ட அழிவுகளால் தன்னை விட அவ்ற்றுக்குச் சக்தி அதிகம் என்பதை உணர்ந்தான். எனவே நிலநடுக்கம், எரிமலை, கடற்காற்று, மழைவெள்ளம், சூரியவெப்பம், இடி முழக்கம் போன்றவற்றின் சக்தியைக் கண்டு பயந்தான். அந்த பயமே பக்திக்கு வழிவகுத்துக் கொடுத்தது. அதனாலேயே பயபக்தியுடன் வழிபட வேண்டும் என்று இன்றும் சொல்கிறோம். பண்டைத் தமிழரின் எரிமலை வணக்கத்திற்கு திருவண்ணாமலைக் கார்த்திகத் தீப வழிபாடே சான்றாகும்.

சங்க கால மக்கள் நிலத்தின் மலையின் சக்தியை மலைமகளாயும், தீயின் சக்தியை காடுகிழாளாயும், நீரின் சக்தியை கடல் கெழு செல்வியாயும், சூரைக்காற்றின் சக்தியை சூராமகளிராயும், ஆகாயத்தின் சக்தியை கொல்லிப்பாவையாயும் வழிபட்டனர் என்பதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. அதனாலேயே பெண் தெய்வங்கள் இன்றும் கூட சக்தி என்ற பெயரால் போற்றப் படுகின்றனர். தொல்காப்பியம்,

**வழிபடு தெய்வம் நின்புறம் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு**
**வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**

எனச் செல்வதால் தெய்வ வழிபாடும், தெய்வத்தை வழிபட்டால் அது தம்மைக் காக்கும் என்ற நம்பிக்கையும் சங்ககாலத் தமிழரிடம் வேரூன்றி இருந்ததை அறியலாம்.

### கொற்றவை வழிபாடு

வையை ஆற்றில் நீராடி கொற்றவை போலக்கோலம்புனைந்த பெண்ணொருத்தி கொற்றவையின் நெற்றிக்கண் போன்ற திலகம் இட்டதை பரிபாடல் சொல்வதால் அந்நாளில் கொற்றவைக்கு இருந்த மாண்பை அறிய முடிகிறது. பெருங்காட்டுக் கொற்றி எனக் கலித்தொகை கூறுகிறது.

தொல்காப்பியம் கொற்றவையின் வடிவத்தை "கொற்றவை நிலை" எனச் சிறப்பித்துச் சொல்கிறது. கொற்றவை நிலையைப் போற்றி வழிப்பட்டவர்கள் வெட்சிப்போர் மறவர்கள். நச்சினார்க்கினியர் வருகின்ற வஞ்சிக்கும் கொற்றவை நிலை காரணமாயிற்று. தோற்றோருக்கு கொற்றம் வேண்டியும் வென்றோருக்கு மேற்செல்லுங்கால் கொற்றம் வேண்டியும் வழிபடுவார் ஆதலின் வெட்சிக்கும், வஞ்சிக்கும் கொற்றவை நிலை உரியதாகும். ஆதலால் குறிஞ்சிக்கும், முல்லைக்கும் கொற்றவை நிலை உரியதாகும் எனக் கூறியுள்ளார்.

### சிலப்பதிகாரம்

**முல்லையும் குறிஞ்சியும் முறை**
**முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர்**
**உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்**

என்கிறது. எனவே சங்க காலத்தில் குறிஞ்சி, முல்லை, பாலை ஆகிய மூன்று நிலத்திலம் வாழ்ந்த மக்கள் கொற்றவையை வழிப் பட்டனர் என்பது தெளிவாகிறது.

பண்டையத் தமிழர் கொற்றவையை வெவ்வேறு பெயர்கால அழைத்ததையும் அவள் குமரிக்கோலத்தில் இருந்ததையும் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது. இளங்குமரியில் அமர்ந்திருந்த கொற்றவையின் உருவத்தை

**மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி**
**நுதல்கிழித்து விழித்து இமையா நாட்டத்தப்**
**பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி**
**நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து**
**அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்**
**துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி**
**வளையுடைக் கையிற் சூலமேந்தி**
**கரியின் உரிவை போர்த்து அணங்காகிய**
**அரியின் உரிவை மேகலை யாட்டி**
**சிலம்பும் கழலும் புலம்பும் சீறழ்**

எனக் கூறும் இளங்கோவடிகள் இன்றைய சிவனின் தோற்றத்தில் கொற்றவையைப் படம்பிடித்தக் காட்டுவது அன்றைய சக்தி வழிபாட்டின் முதன்மையைச் சொல்கிறது.

கொற்றவையை வெற்றியைக் கொடுக்கும் தெய்வமாகக் கருதி வழிபட்டனர் என்பதை,

**வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை**

எனச்சிலப்பதிகாரமும், வெற்றிவேல் போர்க் கொற்றவை என்று திருமுருகாற்றுப்படையும் உறுதி செய்கின்றன.

### வையை ஆற்று வழிபாடு

சங்க கால மக்கள் வையை ஆற்றைப் போற்றி வழிப்பட்டதைக் காட்டும் பரிபாடல் எதற்காக வணங்கினர் என்பதையும் சொல்கிறது. மையோடக்கோடனார் "உறுமி இடிக்கும் இடி முழக்கம் போன்ற ஒலியொட கரைகளை மோதிச்செல்லும் வையைப் போராறே! திருமருதமுன்றுறையில் இன்று போல் நின்னிடத்தில் மூழ்கிப் பெறும் இன்பம் என்றும் நீங்காது நிலைக்கட்டும். உன்னால் பெறும் பயன்களைப் பாடி விடிவுப் பெற்று, இன்புற்று மகிழ்வோம்" என்கிறார். எனவே சங்ககால மக்கள் வையையாற்றுப் பெருவெள்ளம் தம்மை அழிக்காது காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வையையை வழிபட்டதை இவை எடுத்தியம்புகின்றன.

### சூரிய வழிபாடு

மழையற்றுப் போக சூரியனின் வெப்ப சக்தியால் காடுகளும் அழிந்து நிலம் காய்ந்து வெடித்துப் பாலை நிலமாய் மாற உலகம் துன்புறறது. அது சூரிய வழிபாட்டிற்குக் காரணமாயிற்று.

**--------- ஓங்கு திரை**
**முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி**
**ஏமுற விளங்கிய சுடரினும்**

என மதுரை மருதன் இளநாகனார் சூரியனும் பழந்தமிழர் வழிபட்ட தெய்வமாக இருந்ததைக் கூறுகிறார்.

**இயக்கி வழிபாடு**

இயற்கையின் எல்லாச் சக்திகளையும் இயக்குபவள் எனும் கருத்தில் "இயக்கு" எனும் சக்தியை பண்டைத் தமிழர் வழி பட்டனர். இயக்கிக்குப் பாற்சோறு படைத்தார் "மாதரி" என்ற செய்தியை,

**அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய**
**புறஞ்சிறை மூதூர்ப் பூங்கள் இயக்கிக்குப்**
**பால்மடை கொடுத்துப் பண்பின் வெயர்வோள்**
**ஆயர் முதுமகள் மாதரி என்போர்**

எனச் சிலப்பதிகாரம் சொல்கிறது. அவ்வழிபாடு இன்றும் இசக்கி வழிபாடாய்த் தொடர்கிறது.

**அணங்கு வழிபாடு**

அணங்கு என்னும் சொல்லிற்கு வருத்துதல் என்ற கருத்தை கலித்தொகை தருகிறது. அதனால் இயற்கையாகத் தமக்கும் துன்பத்தைக் கொடுத்தனவனற்றை "அணங்கு" எனும் அடைமொழி சேர்ந்து சங்கத்தமிழர் அழைத்ததைக் காணமுடிகிறது. உலாவித் திரிந்து வருத்தம் செய்யும் மழை மேகம் அமைந்த மலைத்தொடர் என்பதை ஆடு மழை அணங்கு சால் அடுக்கம் என்றும் வருத்துகின்ற மலை என்பதை அணங்குடை நெடுங்கோடு எனவும் புறநானூறு சொல்கிறது. அணங்கு இடி இடித்து மின்னல் மின்னி மழையாக, எரிமலையாக, புகையாக, அனற்குழம்பாக வெடித்துச் சிதறி பல உருவம் எடுத்து வரும் என்பதை,

**சூருடைச் சிலம்பில் சுடர்ப்பூ வேய்ந்து**
**தாம் வேண்டுவ உருவில் அணங்குமார் வருமே**

என்கிறது அகநானூறு. இன்றும் தீ மதிப்பதை பூ மிதித்தல் என்றே சொல்கிறோம். எனவே அன்றைய சுடர்ப்பூ என்பதே இன்றைய நெருப்பூ ஆனது.

**தவ்வை வழிபாடு**

சங்க இலக்கியங்கள் காட்டும் தாய்த்தெய்வங்களிலே குழந்தைகளை ஈன்றெடுத்த பெருவயிறும் பரந்த சரிந்த கொங்கைகளுடன் இன்றைய சிற்பங்களில் காட்சிதருபவள் தவ்வையே சங்கத்தமிழரின் நனிசிறந்த நாகரீகத்தை உலகிற்குப் பறை சாற்றிக் கொண்டிருப்பது திருக்குறள். அத்திருக்குறளே தவ்வை என்னும் சக்தி வழிபாட்டை எமக்கு எடுத்துச் சொல்கிறது. திருக்குறளுக்கு உரையெதி யோடு திருமகளின் தமக்கையாகத் தன்மையைக் கூறுகின்றனர்.

அழுக்காறாமை என்னும் அதிகாரத்தில்,

**அவ்வித்த அழுக்காறு**
**உடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்**

எனத் "தவ்வை" எனக் கூறும் திருக்குறள். அச்சக்தியை "ஆள்வினை உடைமை" என்ற அதிகாரத்தின் "மாமுகடி" என்ற பெயரால் அழைக்கிறது.

தவ்வை பல்லவர் காலத்தில் பயிர்த் தொழிலின் தெய்வமாகவும், நந்திவர்மன் தன் குலதெய்வமாகவும் வழிப்பட்டதை கல்வெட்டுகள் காட்டுகின்றன. இவ்வம்மையே திருமுருகாற்றுப்படையில் மூத்தவள் எனும் கருத்தில் "பழையோர்" என்று அழைக்கப் படுகிறாள், என்பர். வடதிருப்பரங்குன்றத்து குடவரைக் கரு வறையில் இளமை எழிற்கோலத்தில் ஜேஷ்டையும் வலப்புறம் மகன் நந்திகேசுவரனும் இடப்புறம் மகள் அக்கினி மாதாவும் மேடை ஒன்றில் அமர்ந்திருப்பதாக டாக்டர். இரா. கலைக் கோவன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**காளி வழிபாடு**

**சிலப்பதிகாரத்தில் கண்ணகி வரவுபற்றி மன்னனுக்கு**
**அறுவர்க்கு இளைய நங்கை இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு குருடைக் குடனகம் உகந்த காளி**

எனச் சொல்லும் வாயிற்காப்போன் வாயிலாகவே காளி முதன் முதல் அறிமுகம் ஆகிறாள் எனலாம். அன்னையர் எழுவர் வழிபாட்டில் காளி ஏழாவது தெய்வமாக இருந்ததை "அறுவர்க்கு இளைய நங்கை" எனச் சொல்வதால் உணரலாம்.

**துர்க்கை வழிபாடு**

எருமைத் தலையும் மனிம உடலுமான இருவேறு உருவில் திரண்ட தோள்களுடைய மகிடாசுரனைக் கொன்று அவனின் தலைமேல் நின்றவர் கொற்றவை என்பதை,

**இரண்டுவே றுருவில்;**
**திரண்டுதோர் அவுணன்**
**தலைமிசை நின்ற தையல்**

எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. எனவே கொற்றவையை மகிடாசுரனின் கதையோடு இணைத்து துர்க்கையாகவும் வழிபட்டதைக் காணமுடிகிறது.

**உமை (மலைமகள்) வழிபாடு**

**இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்**
**உமை அமர்ந்து உயர்மலை இருந்தானாக ------**

ஏன இராவணன் கைலை மலையை அசைக் கும் காட்சியோடு உமையம்மையை எமக் குக் கலித்தொகை காட்டுகிறது. முருகனை "மலைமகள் மகனே!" என்றும் கொற்றவை சிறுவ! எனவும் திருமுருகாற்றுப்படை கூறுவதால் கொற்றவையையே மலை மகளாயும் வழிபட்டனர்.

**முடிவுரை**

இயற்கையின் சீற்றங்களின் தாக்கத்தால் அவற்றின் சக்திகளைக் கண்டு பயந்த சங்கத் தமிழர் அவற்றை வழிபடத் தொடங்கினர். இயற்கை அணங்கைத் தணிவிக்க அணங்கிற்கு பலி கொடுத்து வழிபட்டனர். சங்க இலக்கியம் காட்டும் சக்தி வழிபாடானது இயற்கை, இயக்கி, அணங்கு, தவ்வை, கொற்றவை, துர்க்கை, காளி, உமை எனப் பலபல உருவோடும், பெயரோடும் கூர்ப்புப்போல் சிறந்து செல்கிறது.

தொல்லியலாளர் ஆதிச்சநல்லூர் நாகரீகத்தின் காலத்தைத் தொல்லியல் சான்று கொண்டு கி.மு.1700 எனக் கருதுகின்றனர். அங்கு நடந்த அகழ்வாராய்ச்சியில் பறவையும், நெற்கதிரும், தாய்த்தெய்வமும், மானும் பொறிக்கப்பட்ட சுடுமண் பானை ஓடு ஒன்று 2004 -ல் கிடைத்தது. அப்பானை ஓட்டிலிருக்கும் இயற்கைக்காட்சி சங்க இலக்கிய கால சக்தி வழிபாட்டின் நோக்கத்தை எடுத்தோதுகிறது. இதனால் சங்க இலக்கியம் சொல்லும் தமிழரின் சக்தி வழிபாடு 3700 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவதைக் காணலாம்.

**குறிப்புகள்**

1. முதலாம் ஆண்டு தமிழர் மரபு - திருமதி.கோ. ஜெயந்தி ரவிகிருஷ்ணன்
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம்
3. இலக்கிய குறிப்புகளிலிருந்தும் அதாவது புறநானூறு, அகநானூறு, திருமுருகாற்றுப்படை, இணையதளம் வாயிலாகவும்